# PSG COLLEGE OF ARTS & SCIENCE
(AUTONOMOUS)
## BA DEGREE EXAMINATION MAY 2018
(First Semester)

Branch – TAMIL

## ILAKKANAM-I PAYANPATTU ILAKKANAM

Time : Three Hours — Maximum : 75 Marks

### பகுதி - அ

**(10 x 2 = 20)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்**

1 வாக்கியம் என்றால் என்ன?
2 தன்வினை வாக்கியம் என்பது எது?
3 செய்வினை வாக்கியத்திற்கம் செயப்பாட்டு வினை வாக்கியத்திறகும் உள்ள வேறுபாடு யாது?
4 வாக்கியத்தின் வகைகள் எத்தனை?
5 வாக்கியங்களில் மரபுப்பிழை நீக்குதலின் பயன் யாது?
6 வட சொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொல்லினை தேர்வு செய்யும் முறை யாது?
7 வினையெச்சம் என்றால் என்ன?
8 வினையாலனையும் பெயரென்பது யாது?
9 ஈ, ஊ, ஐ, தீ, - இச் சொற்களுக்குரிய பொருள் யாது?
10 பொருந்தாச் சொல்லினைக் கண்டறிவதனால் ஏற்படக்கூடிய நன்மை என்ன?

### பகுதி - ஆ

**(5 x 5 = 25)**

**பின் வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்**

11 அ சொற்களை அகவரிசையில் அமைக்கும் முறையினைக் கூறுக.

அல்லது

ஆ எதிர்மறை வாக்கியத்தினை விளக்குக.

12 அ வாக்கிய அமைப்பில் நேர்க்கூற்று வாக்கியத்தின் நிலையினை எழுதுக.

அல்லது

ஆ கலவை வாக்கியத்தினைச் சான்றுடன் விளக்குக.

13 அ மரபுப்பிழைகளை நீக்கத்தவறுவதனால் ஏற்படும் தீமைகளைத் தருக.

அல்லது

ஆ பிறமொழிச் சொற்களை நீக்குவதனால் ஏற்படும் நன்மைகளைக் கூறுக.

14 அ பெயர்ச்சொல்லின் வகைகளை விளக்குக.

அல்லது

ஆ வேர்ச்சொல்லிருந்து சொற்களை உண்டாக்கும் முறையினைக்கூறுக.

15 அ வாக்கியத்தில் சொற்களைச் சேர்த்து எழுதுவதினாலும் பிரித்து எழுதுவதினாலும் உண்டாகும் பயன்களைத் தருக.

அல்லது

ஆ சொற்றொடரில் ஒரெழுத்து ஒருமொழியின் நிலையினைக்கூறுக.

### பகுதி - இ

**(3 x 10 = 30)**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக**

16 தன்வினையை பிறவினையாக மாற்றுவதற்குரிய விதிகளைப் பற்றி விவரி.
17 நேர்க்கூற்று வாக்கியத்தினை அயற்கூற்று வாக்கியமாக மாற்றும் பொழுது ஏற்படக்கூடிய சிக்கல்களையும் தீர்வுகளையும் தொகுத்தெழுதுக.
18 வல்லெழுத்து மிகும் இடங்களுக்கும் மிகா இடங்களுக்கும் உரிய விதிகளைச் சான்றுடன் விவரி?
19 வினையின் வகைகளை எடுத்துக்காட்டுடன் விவரி?
20 செய்யுளில் தொடை வகைகள் பெறுமிடத்தினைப் பற்றி விரிவாக எழுதுக.